செ.வெ.எண்.52 நாள்:21.08.2020

# நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற வங்கியாளர்கள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப.. அவர்கள் இந்த ஆண்டிற்கு ரூ.3475 கோடி கடன் திட்ட அறிக்கையினை வெளியிட்டார்.

---

நீலகிரி மாவட்ட கூடுதல் ஆட்சியர் அலுவலகத்தில் வங்கியாளர்கள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் இன்று (21.08.2020) நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்து கொண்டு மாவட்ட முன்னோடி வங்கியின் மூலம் இந்த ஆண்டிற்கு ரூ.3475 கோடி கடன் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கான கடன் திட்ட அறிக்கையினை வெளியிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூட்டத்தில் பேசியதாவது:-

ஓவ்வொரு ஆண்டும் நமது மாவட்ட முன்னோடி வங்கி மூலம் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் கடன் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. மேலும் ஆண்டுதோறும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு பயிர்கடன், நகைகடன் உள்ளிட்ட கடனுதவிகளும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு பல்வேறு விதமான கடனுதவிகளும் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டை காட்டிலும் நடப்பாண்டிற்கு ரூ.343 கோடி அதிகமாக கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.3475 கோடி கடன் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயம் சார்ந்த தொழில்களை துவங்க ரூ.2475 கோடியும், குறு மற்றும் நடுத்தர தொழில்துறை மேம்பாட்டிற்கு ரூ.441 கோடியும் பிற முன்னுரிமை கடன்களுக்கு ரூ.559 கோடியும் ஒதுக்கீடு செய்து கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள், விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கடனுதவிகளை பெற்று தங்களது பொருளாதாரத்தினையும், வாழ்வாதாரத்தினையும் உயர்த்தி கொள்ள வேண்டுமெனவும் கடனுதவிகள் பெறுவது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திரு.பாபு, இணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திரு.சிவசுப்ரமணிய சாம்ராஜ், கனரா வங்கி (கோவை) உதவி பொது மேலாளர் திரு.சிவராமன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.சத்தியராஜா, நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு.திருமலைராவ், மாவட்ட முன்னோடி வங்கி அலுவலர் திரு.மோகனகுமார் மற்றும் வங்கியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.